● விலைவாசி உயர்வு ● பதுக்கல் ● விமானத்தாக்குதல் ● கல்வி ● மருந்துவகை

# யாழ் நகரில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்


பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 59 பிரமோதூத தை 12 (25-01-1991) வெள்ளி


யாழ் குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருட்களுக்கான விலைஉயர்வு, பொருளாதாரத் தடை, விவசாயம், மீன்பிடி, கைத்தொழில், போக்குவரவு, சுகாதாரம், கல்வி ஆகியதுறைகளில்ஏற்பட்டுள்ள தாக்கங்கள், கண்மூடித்தனமான விமானத்தாக்குதல்கள் ஆகியவற்றைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நேற்று நகரில் நடாத்தப்பட்டது. ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட இந்த ஊர்வலம் யாழ் பல்கலைக்கழக முன்றிலில் இருந்து ஆரம்பமாகி அகதிகளுக்கான ஐ நா. தூதரகம், செஞ்சிலுவைச்சங்கம் ஆகிய இடங்களுக்குச் சென்று யாழ்செயலகத்தை சென்றடைந்தது. யாழ் அரசாங்க அதிபரிடம் மகஜரும் கையளிக்கப்பட்டது. நேற்றைய ஊர்வலத்தில் மக்கள் பதுங்கும் குழியில் உணவை பதுக்காதே, சிங்கள இன வெறியனுக்கும் கொள்ளை இலாபம் அடிப்பவனுக்கும் என்ன வித்தியாசம், சுயநல — 04 ஆம் பக்கம் பார்க்க

## வளைகுடாவில் இலங்கையர் வேலை இழப்பால்

# 100 மில்லியன் அமெ. டொலர்

# இலங்கை இழப்பு!

## தேயிலை ஏற்றுமதியும் பாதிப்பு

வளைகுடா நெருக்கடியால் இலங்கை அரசுக்கு மாதாந்தம் 55 கோடி ரூபா இழப்பு ஏற்படுவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. மத்திய கிழக்கில் இருந்து இலங்கைக்குக் கிடைக்கும் மொத்த வருவாய் 125 கோடி ரூபாவாகும்.

குவைத் மீது ஈராக் படையெடுத்ததை தொடர்ந்து குவைத்தில் தொழில் புரிந்த ஒரு லட்சம் இலங்கையர்கள் நாடு திரும்ப நேர்ந்தது. இவர்கள் அனுப்பி வந்த பணம் 100 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும்.

சென்றவாரம் வெடித்த போரினால் ஈராக்கில் பணிபுரியும் நாற்பதாயிரம் இலங்கையர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

போர் முடிந்த பின்னர் அழிவுக்குள்ளான மத்திய கிழக்கு, இலங்கையர்களுக்கு முன்போல வேலைவாய்ப்புத் தரும் என எதிர்பார்க்க முடியாது.

எமது தேயிலை ஏற்றுமதியில் 60 வீதம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்கின்றது. போரின் தாக்கத்தால் தேயிலை ஏற்றுமதியும் பாதிக்கப்பட்டுளளது.

போர் ஆரம்பித்ததும் பீப்பா எண்ணெயின் விலை 32 டொலர் ஆக உயர்ந்தது. போர் முடிவுக்கு வரும் என்ற எதிர்பார்ப்பில் விலை வீழ்ச்சியடைந்து போர் தொடரவே மீண்டும் உயர்ந்துள்ளது

எரிபொருள் விலை ஏற்றத்தால் இறக்குமதியாகும் உணவுப் பண்டங்களின் விலை அதிகரிக்கலாம் எனவும் பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். (ப 11)

## பூநகரியில் ஹெலி சூடு

கடந்த செவ்வாயன்று பூநகரியில் உள்ள நல்லூர் பகுதியில் ஹெலி தாக்குதல் நடத்தியதில் இராமலிங்கம் தியாகராசா என்பவரின் வீடு சேதமடைந்தது. (71)

## சாவகச்சேரியில் பாண் விலை இன்று முதல் 8.50

இதுவரை 14 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ஒரு றாத்தல் பாண் இன்று வெள்ளிக்கிழமை 25ந் திகதி முதல் 8 ரூபா 50 சதமாக விற்பனை செய்ய வேண்டும் எனவும், ஒரு றாத்தல் பாண் 350 கிறாமுக்கு குறையாமல் இருக்க வேண்டும் எனவும் சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கம் இன்று நடை —04 ஆம் பக்கம் பார்க்க

## ஆனையிறவில் கடும் மோதல் மேஜர் மக்கன்ரோ வீரமரணம்

ஆனையிறவு முகாம் பகுதியில் நேற்றுக் கடும் மோதல் நடைபெற்றுள்ளது. காலையில் ராணுவத்தினர் முகாமைவிட்டு வெளியேற முற்பட்டபோது விடுதலைப் புலிகள் இடை மறித்துக் கடும் தாக்குதலை மேற்கொண்டனர்.

கடுமையான மோதலைத் தொடர்ந்து படையினர் மீண்டும் முகாமிற்கு பின்வாங்கிச் சென்றனர். இம் மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் மேஜர் மக்கன்ரோ (சதாசிவம் புலேந்திரன்) வவுனியா வீரமரணமடைந்தார். (71)

## வவுனியாவில் மோதல் கொழும்புப் பயணம் தடை

நேற்று வவுனியாவில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் இடம்பெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ் அசாதாரண சூழ்நிலையால் கடந்த இரண்டு நாள்களாக இங்கிருந்து சென்ற கொழும்புப் பயணிகள் அங்குள்ள கோயில்களிலும், பள்ளிக் கூடங்களிலும் தங்கியுள்ளனர்.

இதேவேளை கொழும்பிலிருந்து வரும் பயணிகளை படையினர் யாழ்ப்பாணம் வர அனுமதிப்பதாகவும் தெரிவிககப்படுகிறது. (ப11)

## பதுக்கிவைக்கப்பட்ட மண்ணெண்ணெய் மீட்பு

பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெருமளவு மண்ணெண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டு குடாநாட்டில் பல இடங்களில் கட்டுப்பாட்டு விலையில் நேற்று பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

இதேவேளை தேங்காய் எண்ணெய், சன்லைட்சோப், சீனி ஆகிய பொருள்களும் பல பகுதிகளில் நியாயவிலையில் வர்த்தகர்களால் விநியோகம் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (66 ப 32 33)

## பென்சன் பத்திரங்களை பிறமாவட்டத்திற்கு மாற்றமுடியாது

ஜனவரி மாதப் பென்சன் வழங்கிய பின்னரே யாழ் மாவட்டத்தில் ஒய்வூதியம் பெறுபவர்களது பட்டியலை வெளி மாவட்டங்களுக்கு மாற்ற முடியும்.

இங்குள்ள சிலர் தமது பென்சன் பத்திரங்களை கொழும்பு போன்ற பிறமாவட்டங்களுக்கு மாற்றித் தரும்படி யாழ் செயலக ஓய்வூதியப் பிரிவை கேட்டுவருகின்றனர்.

அதிகரிக்கப்பட்ட விசேட அலவன்ஸ் கடந்த நவம்பர் மாதத்தில் இருந்து இவர்களுக்கு வழங்குவதற்கான நட —04 ஆம் பக்கம் பார்க்க

## செஞ்சிலுவை லொறிகள் மீதும் இரு ஹெலிகள் தாக்குதல்

வவுனியாவில் இருந்து மடுவிலுள்ள அகதிகளுக்கென உணவுப்பொருள்களை ஏற்றி வந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் 2 லொறிகள் மீது 2 ஹெலிகப்டர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டன.

இத்தாக்குதலில் 2 லொறிகளும் பலத்த சேதமடைந்துள்ளன. கடந்த திங்களன்று காலை 11 மணியளவில் பெரியதம்பனையில் வைத்தே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (71)

## அ. தி. மு. க - இந்திரா காங்கிரஸ் சட்டப்பேரவை பகிஷ்கரிப்பு

அ தி. மு க. சட்டமன்ற உறுப்பினர்கள் எவரும் இனி மேல் சட்டசபைக்குச் செல்ல மாட்டார்கள், சபையை முற்று முழுதாகப் பகிஷ்கரிப்பார்கள் என்று கட்சியின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்துள்ளார். அவர்கள் இனித் தத்தம் தொகுதிகளில் பணி செய்வார்கள் என்றும் அவர் கூறினார்.

இக்கட்சி உறுப்பினர்களை சபைக்குவரக் கூடாதென சபாநாயகர் தமிழ்க்குடிமகன் நேற்று முன்தினம் சபையில் ஏற்பட்ட அமளி துமளியின் பின் அறிவித்துள்ளது —04 ஆம் பக்கம் பார்க்க

## அத்தியாவசிய பொருள்களுக்கு புதிய விலைகள் நிர்ணயம்

மக்களின் அன்றாட தேவைகட்கு அவசியமான மேலும் சில பொருள்களுக்கு மொத்த, சில்லறை விலைகள் யாழ் வர்த்தக சங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இதன்படி வெள்ளைப் பச்சை அரிசி 29 ரூபா, கோறா வெள்ளைப்பச்சை 29 ரூபா 50 சதம், சம்பா 31 ரூபா, லக்ஸ் 9 ரூபா, லைபோய் 8 ரூபா 75 சதம் — 4 ஆம் பக்கம் பார்க்க

## பஸ் சேவை இடைநிறுத்தம்

பேரதீவு வவுனியா மினிபஸ் போக்குவரத்துச்சேவை மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பேரதீவு வவுனியா மினிபஸ்களின் சங்குப்பிட்டி நேரக்காப்பாளர் அறிவித்துள்ளார். (ப35)

## வலைப்பாடு துறைக்கு உணவுக்கப்பல் வருகிறது

கிளிநொச்சி மாவட்டத்திற்காக அரிசி, மா, சீனி மற்றும் எரிபொருள்களுடன் வலைப்பாடுதுறைக்கு உணவுக்கப்பல் ஒன்று வரவுள்ளது.

இக்கப்பல் நேற்று முன்தினம் கொழும்பிலிருந்துபுறப்பட்டதாகவும் இதில் யாழ்ப்பாணத்திற்காக 500 மெற்றிக்தொன் பசளையும் கொண்டு வரப்படுகிப்ளனவும் தெரிகிறது, (ப-35)


## மேஜர் தாரிணிக்கு பூநகரியில் அஞ்சலி

கடுவனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் வீரமரணமடைந்த —04 ஆம் பக்கம் பார்க்க

## களஞ்சியப்படுத்தும் இடம் பதிவுசெய்யப்பட வேண்டும்

வர்த்தகர்கள் பொருள்களைக் களஞ்சியப்படுத்தும் இடங்களின் முகவரிகளை வர்த்தக சங்கத்தில் உடன் பதிவு செய்ய வேண்டும் என வர்த்தக சங்கமும் விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களமும் அறிவித்துள்ளன மொத்த வியாபாரிகளும் சில்லறை வியாபாரிகளும் தத்தமது களஞ்சியங்களில் மட்டுமே பொருள்களை களஞ்சியப்படுத்தல் — 04 ஆம் பக்கம் பார்க்க

# "குண்டூசி துளைக்கும் துவாரத்தளவு நிலம்கூட இல்லாதவரே நம் இலட்சியத் தலைவர்"





'உலகத் தலைவர்களில் பலரும் பெரும் சொத்துக்களுக்கு சொந்தக் காரர்களாக இருந்துள்ளனர்—இருந்தும் வருகின்றனர்'

'ஆனால் அடக்கியொடுக்கப்பட்ட எம் மக்களுக்காக அல்லும், பகலும் பாடுபடுகின்ற தமிழீழத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களிடம் குண்டூசி துளைக்கும் துவாரத்தளவு நிலமோ, வேறு எந்தச் சொத்துகளோ கிடையாது.'

'தன் மக்கள் விடுதலை கோரும் இலட்சியம் ஒன்றே அவரின் பெரும் சொத்து. இத்தகைய ஒரு உன்னத இலட்சியத் தலைவரை நாம் பெற்றிருப்பது எம் பெரும் பேறே'.

இவ்வாறு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம் பெற்ற ஆசிரியர்—ஊழியர் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்டப் பிரசாரப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் தெரிவித்தார்.

'தென்தமிழீழத்தில் வீட்டை விட்டு வெளியே போனவர்களை தேடிச் செல்பவர்கள் மீண்டும் வீடு திரும்பி வருவதில்லை — இப்படியொரு சூழ் நிலையிலேயே மக்கள் அங்கு வாழ்ந்து வருகின்றார்கள். யூதர்களுக்கு நாஜிப்படை செய்ததைவிட தமிழர்களுக்கு ஸ்ரீ லங்காப் படைகள் பன்மடங்கு அட்டூழியங்களைச் செய்து வருகின்றன' எனவும் ஆஞ்சநேயர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தார். (66)

# ஒய்வெடுக்கும் மருத்துவரை மீண்டும் கடமைக்கு அழைக்க புதிய தீர்மானம்

சுயவிருப்பு ஓய்வூதியத்திட்டத்தின்கீழ் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற வைத்தியர்களும், சுகாதார சேவை ஊழியர்களும் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் வேலையில் சேர்ந்துகொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

ஓய்வுபெற்ற வைத்திய நிபுணர்கள், பல வைத்தியர்கள்' தாதிமார், குழந்தை சுகாதார ஊழியர்கள், மருத்துவத் தொழில்நுட்ப ஊழியர்கள் ஆகியோரை வருடா வருடம் புதுப்பிக்கப்பட வேண்டிய ஒப்பந்த அடிப்படையில் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளச் சுகாதார, மகளிர் விவகார அமைச்சு தீர்மானித்துள்ளது.

புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கமைய அரசாங்க சேவையில் 642 வைத்தியர்களும், ஏனைய மருத்துவ ஊழியர்களும் ஓய்வுபெற்றுள்ளனர்.

உள்ளூராட்சித் துறையில் இவ்விதம் ஓய்வுபெற்றவைத்தியர்களினதும் ஏனைய மருத்துவ ஊழியர்களினதும் எண்ணிக்கை 1656 ஆகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசு தான் அறிவித்த சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டம் பற்றிய அறிவிப்பின் எதிரொலியாக மருத்துவச்சேவை எதிர்நோக்கும் பல்வேறு இடையூறுகளை இப்போது உணரத் தலைப்பட்டுள்ளதனையே இவ்வொப்பந்த அடிப்படைத் தீர்மானம் காட்டுகிறது எனக் கூறப்படுகிறது.

## பல்கலைக்கழக அபிவிருத்திக்கு இவ் வருடம் 10 கோடி ரூபா

பல்கலைக்கழகங்களின் அபிவிருத்திக்கு இவ்வருடம் பத்துக்கோடி ரூபா செலவிடப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்தவருடம் இத்தொகை இருபது கோடி ரூபாவாகவும், 1993இல் முப்பதுகோடி ரூபாவாகவும் அதிகரிக்கப்படும் என்றும் கல்வி, உயர்கல்வியமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி கூறியுள்ளார்.

றுகுணுப் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தினதும், காலியில் உள்ள வைத்திய மாணவர் சங்கத்தினதும் பிரதிநிதிகளுடன் உரையாடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்வருடம் பல்கலைக்கழக கல்லூரிகள் நிறுவப்படவுள்ளன. இதனால் பல்கலைக்கழகங்களினது தரம் எவ்வகையிலும் குறையாது. பல்கலைக்கழகக் கல்லூரிகள் அமைக்கப்பட்டதும் கூடுதல் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறுவர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் மாவீரர் தினப் போட்டி முடிவுகளின் தொடர்ச்சி நாளை வரும்.

# யாழ் ஜெய்ப்பூர் தொழிலகத்திற்கு 30 செயற்கை அவயவங்கள் அன்பளிப்பு

யாழ் ஜெய்ப்பூர் செயற்கை அவயவத் தொழிலகத்திற்குத் தொண்டர் நிறுவனம் ஒன்று 30 செயற்கைப் பாதங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

தற்பொழுது இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட பலர் செயற்கை அவயவங்களைப் பொருத்துவதற்கு யாழ் ஜெய்ப்பூர் செயற்கை அவயவத் தொழிற்சாலையில் பதிவு செய்துள்ளனர்.

எனினும் கொழும்புத் தலைமை அலுவலகம் யாழ் தொழிற்சாலைக்குச் செயற்கை அவயவங்களை அனுப்புவதற்கு தற்பொழுது பின்னடித்து வருவதினால் இவர்களுக்கு செயற்கை அவயவங்களைப் பொருத்த முடியாத நிலை இருந்து வருவதாக ஜெய்ப்பூர் தொழிலகவட்டாரங்கள் தெரிவித்தன. (74)

# தேயிலை விலையை நிர்ணயிக்க இல.-இந்திய கூட்டு உடன்படிக்கை

இலங்கையிடமிருந்து அதிகளவு தேயிலையைக் கொள்வனவு செய்யவும், கூட்டாக தேயிலையின் விலையை நிர்ணயிப்பது தொடர்பாக கூட்டு உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ளவும் இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்தியத் தூதுவருடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டிருப்பதாக தோட்டத் தொழிற்துறை பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இந்திய தோட்டத்தொழில் அமைச்சர் இலங்கையிடமிருந்து அதிகளவு தேயிலையைக் கொள்வனவு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் ரஞ்சன் தெரிவித்துள்ளார்.


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மார்ச் 1991 O/L பரீட்சைக்கு உதவியாக Dec 1990 இல் நடைபெற்ற O/L பரீட்சை வினாத்தாள் தொகுதி (ஆங்கிலம், சமூகக்கல்வி சமவுயரக் கோட்டுப்படம் வினாத்தாள் உட்பட) விற்பனையாகிறது. மொத்தமாக வாங்குவோர்க்கு விலைக் கழிவு உண்டு. ஆங்கில வினாத்தாள் தனியாகவும் பெற்றுக் கொள்ள முடியும். எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் இருபாலைச் சந்தி.

01159

### விற்பனைக்கு

மில்க்வைற் திரவ சவர்க்காரம் (MILK WHITE LIQUID SOAP) எவ்வித அழுக்கையும் அகற்றும் சக்தி கொண்டது. வீட்டுச் சலவைக்குச்சிறந்தது. போத்தல் ரூ 90/-, ½ போத்தல் ரூ 45/- மொத்தக் கொள்வனவுக்கு விசேட கழிவு இணுவில், திருநெல்வேலி, யாழ் நவீன சந்தை, அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. மில்க்வைற். 01178

### விற்பனைக்கு

என்னால் புதிதாகத்திறக்கப் பட்ட பண்ணையில் மிளகாய், கத்தரி கோவா, பீற்றூட், போன்ற மரக்கறி விதைகளும், நாற்றுகளும் வீட்டுத் தோட்ட உர வகைகளும் விற்பனை செய்யப் படுகின்றன. சிவஐங்கரன் விவசாய விற்பனை நிலையம், அராலி மதி வட்டுக்கோட்டை 01169

## போட்டோஸ்ரட்

நல்லூரில் தரமான போட்டோஸ்ரட் பிரதிகளுக்கும் கறுப்பு, வெள்ளைப் புகைப்படங்களுக்கும் நாடவேண்டிய ஸ்தாபனம்

"சித்ராலயா"

இல. 351, கோயில் வீதி, நல்லூர்.

(நல்லூர் கோயில் பின் வீதியில், கம்பன் கோட்டம் முன்பாக)

01172

## தாதிப் பயிற்சி நெறி

## Diploma in Nursing

10.2.1991 இல் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

(1½ வருட காலப் பயிற்சிநெறி)

விபரங்கட்கு:

அதிபர்

சாயி மெடிக்கல் அக்கடமி

இல:- 6, பருத்தித்துறை வீதி, (முதலாம் ஒழுங்கை) யாழ்ப்பாணம்.

01160

## நாவலர்

சித்தன்கேணி

### அளவையியல்

திரு. சுப்பிரமணியம்

90 A/L - விஞ்ஞானிகள்
சனி 4.00pm, ஞாயிறு 5.00pm

91 A/L - குறியீட்டு அளவையியல்
சனி 3 00pm, ஞாயிறு 4.00pm

92 A/L - ஆரம்ப அளவையியல்
சனி 5 00pm, ஞாயிறு 3 00pm

### தூய பிரயோக கணிதம்

90 A/L- தளக்கேத்திர கணிதம்
- அமுக்கமையம்

91 A/L- வட்டம்
- வட்ட இயக்கம்

92 A/L- திரிகோண கணிதம், சார்புகள்
- காவிகள்,
நீர்நிலையியல்.

By Mr. A. சந்திரமோகன்

அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

01163

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

தோற்றம் 27 - 04 - 1936 மறைவு 26 - 12 - 1990

### அமரர் நாகலிங்கம் குமாரமூர்த்தி

(நில அளவை உத்தியோகத்தர் கிளிநொச்சி)

எமது குடும்பத்தின் ஒளிவிளக்கான
எங்கள் அன்புத்தெய்வமே, நீங்கள் எங்களை
விட்டுப்பிரிந்து சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்களை விட்டு என்றும் அகலாதிருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

7 ஆம் வட்டாரம்
மண்டைதீவு
25. 01. 1991

குடும்பத்தினர்

01171

# 7 மாத இராணுவ நடவடிக்கையால்

## 50 மாணவர், 20 ஆசிரியர் யாழ்மாவட்டத்தில் மரணம்

கடந்த ஜூன் மாதத்திற்குப் பின்னர் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளினால் யாழ் மாவட்டத்தில் மட்டும் 50க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களும், 20க்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் மரணமடைந்துள்ளனர்.

யாழ் கல்வித் திணைக்களம் பாடசாலை ரீதியாகச் சேகரித்து வரும் தகவல்களில் இருந்து இந்த விபரங்கள் தெரியவந்துள்ளன.

பல பாடசாலைகள் இந்த விபரங்களைக் கல்வித் திணைக்களத்திற்கு இன்னும் அனுப்பி வைக்காததினால், இறந்தோரின் தொகை மேலும் அதிகமாக இருக்கலாம் எனவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த கால வன்செயலினால் யாழ் மாவட்டப் பாடசாலைக் கட்டிடங்களுக்கும், தளபாடங்களுக்கும் பலகோடி ரூபா பெறுமதியான சேதம் ஏற்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (74)

## எரிபொருள் இல்லை என்றால் என்ன? இவர்கள் 'மூளை' இப்படியும் செயற்படலாம்

ஸ்ரீலங்கா விமானப் படையினர் ஹெலிகொப்டர்களைக் கட்டி இழுத்துக்கொண்டு யாழ்ப்பாணம் செல்வதாகச் சித்தரிக்கும் கார்ட்டூன் ஒன்றைக் கொழும்பிலிருந்து வெளியாகும் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை பிரசுரித்துள்ளது.

வளைகுடா யுத்தத்தால் எண்ணெய்ப் பற்றாக்குறை ஏற்பட்டால் விமானப்படையினர் தரை மூலமான யுத்தத்தில் குதிப்பார்கள் என இலங்கை விமானப் படைத் தளபதி ஏயர்மார்ஸல் குணவர்த்தனா அண்மையில் தெரிவித்திருந்தார்.

நடைமுறைச் சாத்தியமில்லாத விமானப்படைத் தளபதியின் இந்தக் கருத்தைக் கேலி செய்யும் வகையில் பிரபல கேலிச் சித்திரக்காரர் வசந்த இந்தக் கார்ட்டூனை வரைந்துள்ளார்.

## சென்னை - கொழும்பு விமானச் சேவை

இந்தியன் எயர்லைன்ஸ் நிறுவனம் கொழும்பிற்கும் - சென்னைக்கும் இடையேயான விமானச் சேவையை மீண்டும் 28-ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கவுள்ளது.

வாராந்தரம் திங்கள், செவ்வாய், சனிக்கிழமைகளில் மட்டுமே இச்சேவை நடாத்தப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## கம்பன் கோட்டத்தில் இலக்கியச்சந்திப்பு

'எண்பதிற்குப் பின் ஈழத்துத் தமிழ் இலக்கியம்' என்னும் தலைப்பிலான இலக்கியச் சந்திப்புத் தொடர் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் நடைபெறும்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் அரங்கில் நடைபெறவுள்ள இந்த இலக்கியச் சந்திப்பில் 'எண்பதிற்குப் பின் ஈழத்துத் தமிழ் நாடகங்கள்' ஆய்வும் இடம்பெறும்.

## பல்லவராயன்கட்டு குளம் உடைப்பு மன்னார் வீதியில் போக்குவரத்து பாதிப்பு

பூநகரி கரியாலை நாகபடுவான் குளம் நீர் நிரம்பி வான் பாய்கிறது.

இதனால் பல்லவராயன்கட்டு சிறு நீர்ப்பாசனத்திட்டகுளம் உடைப்பு எடுத்ததினால் வெள்ளம் பெருகியதைத் தொடர்ந்து பல்லவராயன் கட்டு, சோலைப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து மாதிரிக் கிராமம், ஜெயபுரம் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

சோலைப்பகுதிக்கூட்டுறவுக் கடைக்குக்கூட மக்கள் செல்ல முடியாது இருக்கின்றனர் இதனால் 36-37 ஆம் கட்டை பூநகரி - மன்னார் வீதியால் நீர் பாய்ந்ததினைத் தொடர்ந்து வாகனப் போக்குவரத்து செய்யமுடியாத நிலையில்பொருட்கள் இறக்கப்பட்டு ஏற்றப்படுகின்றன இவ் வீதி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது

இதே வேளை கரியாலை நாகபடுவான் குளத்தில் அதிக நீர் தேங்கி அணைக்கட்டு உடைக்கும் நிலையில் நீர் வெளியே திறந்து விடப்பட்டுள்ளது. (ப-35)

## உள்ளூராட்சி ஊழியர்களுக்கு இடமாற்ற உத்தரவு

உள்ளூராட்சித் திணைக்களத்தைச் சேர்ந்த பல ஊழியர்களுக்கு மாகாண சபையினால் இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இவ் உத்தரவினால் வட பகுதியைச் சேர்ந்த பல ஊழியர்கள் கிழக்குப் பகுதிக்குச் செல்ல வேண்டியுள்ளது. லிகிதர் தரத்தைச் சேர்ந்த பலருக்கும் இடமாற்றம் கிடைத்துள்ளதால் பல உப அலுவலகங்களில் வெற்றிடங்கள் தோன்றியுள்ளதாக அறியக் கிடைக்கின்றது.

பல பிரதேச சபை உபஅலுவலகங்களில் இத் தரத்தைச் சேர்ந்தோரே பொறுப்பதிகாரிகளாகப் பணிபுரிந்து வருவதனால் பல இடங்களில் பொறுப்பதிகாரி பதவிகளும் நிரப்பப்படவேண்டியுள்ளன.

அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விசேட ஓய்வூதியத் திட்டத்தின் அடிப்படையிலும் பலர் ஓய்வு பெறுவதனால் பல தரங்களைச் சேர்ந்த வெற்றிடங்கள் உள்ளூராட்சி சேவையில் நிரப்பப்படாது உள்ளதையும் காணக்கூடியதாகவுள்ளது. (ப-1)

## தேசிய தமிழ் சாகித்திய விழா கண்டியில் மார்ச் மாதம் நடைபெறும்

தேசிய தமிழ் சாகித்திய விழா இம்முறை மார்ச் மாதம் கண்டியில் நடாத்தப்படவுள்ளதாக இந்து சமய தமிழ்க் கலாசார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தச் சாகித்திய விழாவில் புத்தக, சஞ்சிகை, ஓவிய, சிற்ப, அரும்பொருட் கண்காட்சிகளும் நடாத்தப்படவுள்ளன. (ப-1)

## கடந்தது 30 வருடங்களே! மயங்கிவிடாதீர் மருந்துக்கும் மருந்தில்லை

அரிசி ஒரு இறா. 1.50 சதம், சீனி ஒரு இறா. 1 30 சதம், மா ஒரு இறா. இருபத்திநாலரைச் சதம், உருளைக்கிழங்கு ஒரு இறா. 30 சதம், தேங்காய் எண்ணெய் போத்தல் 80 சதம், தீப்பெட்டி 5 சதம்.

வாசகர்களே திகைக்கிறீர்களா? நிர்ணயிக்கப்பட்ட இவ் விலைகள் கடந்த 30 வருடங்களுக்கு முன் நடைமுறையில் இருந்தவை.

யாழ் மாவட்ட பல நோ. கூ. ச. சமாசங்களின் சபையினால் 13 3 61 ஆம் திகதியிட்டு வெளியிடப்பட்டு இவ் விலைகள் குறிக்கப்பட்ட அறிவித்தல் பிரசுரமொன்றை எமது வாசகர் ஒருவர் எமக்கு அனுப்பி வைத்துள்ளார்.

பணவீக்கம், போக்குவரத்துத் தடங்கல் போன்றவை விலையுயர்வுகளுக்குக் காரணமாய் இருக்கின்ற போதிலும் 30 ஆண்டுகளில் விலைவாசி விஷம் போல் எத்தனை மடங்கு அதிகரித்து விட்டது என்பதை வாசகர்களே நீங்களே கணித்துக்கொள்ளுங்கள். மலைத்துப் போய் மயங்கி விழுந்து விடாதீர்கள் அதை மாற்ற 'மருந்துக்கும்' மருந்து இல்லாத நிலை. (ப-10)

## உணவு முத்திரை கால எல்லை நீடிப்பு

உணவு முத்திரைகளுக்குரிய பொருட்களைப் பெறுவதற்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

6,7,8,9,10 ஆம் புள்ளிகளை இவ்வாண்டு ஆனி மாதம் வரை பொருட்களைப் பெற்றுக்கொள்ளப் பாவிக்க முடியும் என யாழ் அரச அதிபர் தெரிவித்துள்ளார். (66)

'செங்கைஆழியான், இன்று தமது ஐம்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார். வாசகர்களோடு சேர்ந்து முரசொலி அவரை வாழ்த்துகிறது.

## சாதனையாளர் செங்கை ஆழியான்



'Prolific Writers' என ஆங்கிலத்தில் ஒரு தொடருண்டு. 'எழுதிக் குவிப்போர்' என்று தமிழில் சொல்லலாம். ஈழத்து எழுத்தாளர்களில் செங்கை ஆழியானுக்கு இது பொருந்துவது போல வேறு யாருக்கும் பொருந்தாது. கலாநிதி நா. சுப்பிரமணியன் கணிப்பின்படி ஈழத்தில் வெளிவந்த நாவல்கள் 407 (1989 வரை). அவற்றுள் செங்கை ஆழியான் உடையவை 26 (நூலுருப் பெறாதவை 7) இவை தவிர சிறுகதைகள், குறுநாவல்கள், சித்திரங்கள், சமகால நிகழ்வுகள் பற்றிய விவரணங்கள் என இந்த மனிதர் நிரம்ப எழுதியிருக்கிறார்.

''இதையெல்லாம் எப்படிச் சாதித்தீர்கள்?'' என்று கேட்டால், ''உன்னுடைய வாழ்நாளில் அரைவாசியும் நீ என்ன செய்தாய்?'' என்ற கேள்விக்கு நான் விடையளிக்க வேண்டாமா? என்று பாரசீகக் கவிஞர் சாஅதியை நினைவூட்டுகிறார் இந்தச் சாதனையாளர்.

உதவி அரசாங்க அதிபராக, புகழ்பூத்த புவியியல் ஆசிரியனாக, எழுத்தாளனாக, ஓயாது ஒழியாது உழைக்கும் செங்கை ஆழியான், ''ஒவ்வொரு நாளையும் பூரணமாகப் பயன்படுத்துபவன் நான். எழுதுவதற்கு எனக்கு 'மூட்' தேவையில்லை; நான் எப்பொழுதுமே 'றெடி' என்கிறார்.

ஆரம்பத்தில் (கல்கியின் செல்வாக்கு?) வரலாற்று நாவல்கள் எழுதிக்கொண்டிருந்த செங்கை ஆழியான் அதற்காக யாரிடமும் மன்னிப்பு (apology) கேட்கத் தயாராய் இல்லை! சரித்திர நாவல்களை விமர்சகர்கள் 'தலையணை நூல்கள்' என எள்ளலோடு குறிப்பிட்டுள்ளபோதும், மக்களிடையே அவற்றுக்கு ஆதரவு அதிகம் என்று சரியாக மதிப்பிட்டு வைத்திருக்கும் செங்கைஆழியான் இலக்கியம் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதில் தெளிவாக இருக்கிறார்.

யாழ்ப்பாணச் சமூகத்தில் ஆழமாக வேரோடியுள்ள சாதிப் பிரச்சினையைக் கருவாகக் கொண்டவை 'பிரளயம்' (1971) 'அக்கினி' (1987) ஆகிய நாவல்கள் கல்வி வாய்ப்பாலும், செல்வ வளத்தாலும், தொழில் மாற்றத்தாலும் சாதி ஒழியும் என்ற கருத்தை ஒரு தத்துவமாக முன் வைக்கிறார் செங்கை ஆழியான்.

'முற்றத்து ஒற்றைப்பனை' என்ற குறுநாவல் ஆசிரியர் பிறந்து வளர்ந்த வண்ணார்பண்ணைப் பகுதியைக் களமாகக் கொண்டது. சுமார் 35, 40 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் 'கொடிகட்டிப் பறந்த' பட்டம் விடும் கலையின் மகத்துவத்தை உணர்த்துவது.

தாம் கண்டவற்றை - உணர்ந்தவற்றை கலையாக்குவதில் கைதேர்ந்தவர் செங்கைஆழியான். சலவைத் தொழிலாளர் வாழ்வைப் 'பிரளய'மும், சுருட்டுத் தொழிலாளர் அவலத்தை 'இரவின் முடிவு'ம், இடம்பெயரும் மீனவருடைய பிரச்சினையை 'வாடைக்காற்று'ம் சித்திரிக்கின்றன. உண்மையில், இந்த variety தான் செங்கை ஆழியானுக்குப் பெருமை சேர்ப்பது.

தமது படைப்புக்களில் உச்சமானதாக ஆசிரியரே கருதும் 'காட்டாறு', ஒரு காட்டுக்கிராமம் எவ்வாறு உத்தியோகத்தர்களாலும், நிலச்சுவாந்தார்களாலும் சீரழிக்கப்படுகிறது என்பதைச் சித்திரிப்பது. Woolfக்கு 'The Village in the Jungle' போல, செங்கை ஆழியானுக்குக் 'காட்டாறு.'

புனைகதை ஜாம்பவான்களான ரொல்ஸ்ரோய், ஷோலகோவ், டொஸ்ரோவ்ஸ்கி ஆகியோரைப்பார்த்து நான் ஏங்குவதுண்டு - இரண்டு உலகப்போர்களையும் ஒரு யுகப்புரட்சியையும் சந்தித்த ரஷ்யர்களுக்கு வாய்த்த அனுபவப்பரப்பு நம்மவர்களுக்கு வாய்க்குமா என்று! ஆனால் கிடைத்த வாய்ப்புக்களை நன்றாகவே பயன்படுத்திய ஒருவரைக் காட்டச் சொன்னால் என் விரல் செங்கை ஆழியானையே சுட்டும்

இதற்கு நல்ல உதாரணம் 'யானை' யானைகள் உணவு' நீர்த்தேவைகளுக்காக இடம்பெயரும் இயல்பின அவை நூற்றுக்கணக்கான மைல்தூரம் செல்லும் பாதை Elephant track எனப்படும் 'யானைத்தடம்'. மனிதன் காடுகளை அழிப்பதால் யானைத்தடம் அழிந்துவிட, யானைகள் கிராமங்களுக்குள் புகுந்து அழிவை ஏற்படுத்துகின்றன

காலில் காயத்தோடு அலைந்து திரிந்த யானை ஓர் இளம் பெண்ணைக் கொன்று விடுகிறது. காரியாதிகாரி குணராசா மரணவிசாரணை நடத்துகிறார். 'சொல்லி வைத்தாற்போல்' சில தினங்களில், யானை சுடப்பட்டுக்கிடக்கிறது பாதுகாக்கப்பட்ட விலங்கான யானையைக் கொல்வது சட்டப்படி குற்றம் டி ஆர். ஓ. மீண்டும் விசாரணை நடத்துகிறார் 'சேர், நான்தான் இந்த யானையைக் கொன்றேன்!' என ஓர் இளைஞன் பகிரங்கமாக அறிவிக்கிறான் முன்பு யானையால் அடித்துக்கொல்லப்பட்டவள் அவனுடைய இளம் மனைவி என்று தெரியவருகிறது. சம்பவம் 'யானை'க்குக் கருவாகிறது.

ஒரு சிறு கதைதான். ஆனால் அவ்விளைஞன் யானை பின்னே போவது நூறு பக்கங்களுக்கு மேல் நீளுகிறது யானை நடந்த தடமெங்கும் காட்டின் அழகும் காம்பீர்யமும் ஜொலிக்கின்றன. கலாநிதி நா சுப்பிரமணியன் இதில் விவரணத்தன்மை அதிகம் என்பார். ஹெமிங்வேயின் 'கடலும் கிழவனும்' கூட நாலு வரியில் சொல்லக்கூடிய கதைதான் ஒரு மீனுக்கெதிராக மட்டுமா அந்தக் கிழவன் போராடுகிறான்? இயற்கைக்கெதிராக, மாறுபடும் சக்திகளுக்கெதிராக! அது போன்றதே தன் காதலியைக் கொன்ற யானை மீது வஞ்சம் தீர்க்கப் புறப்பட்ட செங்காரனுடைய கதையும்!

தமிழர்-சிங்களவர் உறவில் ஏற்படும் விரிசல்களைப் பகைப் புலமாகக் கொண்ட 'ஒருமைய வட்டங்கள்' தமிழ்

— 04 ஆம் பக்கம் பார்க்க

முரசொலி

எமது சிந்தனை

1991 - 01 - 25 - வெள்ளி

''ஊசியின் காதுக்கூடாக ஒட்டகம் நுழைந்தாலும் நுழையலாம்; ஆனால் ஒரு பணக்காரனால் தேவனுடைய இராச்சியத்துள் நுழைய முடியாது!''

— இயேசுபெருமான்

# தர நிர்ணயமும் வேண்டும்!

கடந்த ஜூனில் இங்கு தொடங்கிய போரும், சென்றவாரம் வளைகுடாவில் வெடித்த போரும் வியாபாரிகளுக்குக் கொண்டாட்டமாகவும் மக்களுக்குத் திண்டாட்டமாகவும் முடிந்துள்ளன.

போக்குவரத்துச் சீர்குலைவாலும் இராணுவக் கெடுபிடிகளாலும், வடபகுதியில் அத்தியாவசிய உணவுப் பண்டங்களுக்கும், எரிபொருளுக்கும் தட்டுப்பாடு நிலவுவது உண்மையே ஆனால் செயற்கைத்தட்டுப்பாட்டை உண்டாக்கிப் பொது மக்களை வாட்டியெடுக்கும் கலையில் நம் வியாபாரிகள் கைதேர்ந்தவர்களாகி விட்டார்கள். அவர்கள் 'ஆசைக்கோர் அளவில்லை!'

பொங்கலுக்கு முதல்வாரமே சர்க்கரையும் தேங்காய் எண்ணெயும் விலை ஏறத்தொடங்கிவிட்டன. போர் நிறுத்த அறிவித்தல் வந்ததும் பொருள்கள் விலையிறங்கத் தொடங்கின. வியாபாரிகளுக்கு 'சப் 'பென்று போய்விட்டது. பிக்குமாரும் தளபதிகளும் போரைத் தொடர்வதென்று தீர்மானித்தபோதுதான் பலருக்கு 'முகம் வெளித்தது'. ப்றெஃச்ட் படைத்த 'சுண்ணத்தினால் ஒரு வட்டம்' நாடகத்தில் வரும் ஒருவனைப் போல் ''போர் வாழ்க!'' என்று கூவத் தொடங்கி விட்டார்கள்.

"வளைகுடாவில் போர்மூண்ட செய்தி வந்ததுதான் தாமதம், மண்ணெண்ணெய் மாயமாகி விட்டது. தொடர்ந்து இரண்டு நாள்மழை பெய்ததும் அரிசிப் பஞ்சம்!

போர் பல துன்பங்களைக் கொண்டு வருவது உண்மை: சாவு, 'அழிவு, அகதிவாழ்க்கை என மக்கள் துன்புறுவர் இவற்றைவிட 'தவிச்ச முயல் அடிக்கும்' வியாபாரிகள் செய்யும் கொடுமை மோசமானது. அத்தியாவசிய உணவு, மருந்து, எரிபொருள் முதலியவற்றை அனுமதிக்க மறுக்கும் அரசைவிட, இவர்கள் செய்வது பெரிய துரோகம்!

பொருள்களைப் பதுக்குகிறார்கள்; போக்குவரத்துக் கஷ்டம் என்ற சாட்டை வைத்துக்கொண்டு பத்துப் பதினைந்து மடங்கு விலைகளை உயர்த்தி விடுகிறார்கள். நுகர்வோரை ஈவிரக்கமின்றி உறிஞ்சுகிறார்கள். இது வாணிகம் அல்ல; அப்பட்டமான சுரண்டல்!

உண்மையில் வாணிகம் என்பதுதான் என்ன? 'பேணிப் பிறவும் தமபோல் செயல்' என்பார் திருவள்ளுவர். பண்டமாற்றில் ஈடுபடும் போது தமவும், பிறவும் ஒப்பநாடி, தாம்பெறுவதை மிகுதியாகப் பெறாமலும் கொடுப்பதைக் குறைத்துக் கொடாமலும் பண்டைத்தமிழர் வாணிகம் செய்தார்களாம்! அந்தச் செய்தியெல்லாம் ஏட்டளவில்!. இன்று யார் வயிற்றிலாவது அடித்துப் பணம் பண்ணலாம் என்பது இன்றைய தமிழர் கொள்கையாகி விட்டது.

இங்கிலாந்தில் ஒரு முறை குழந்தைகள் பாலுணவுக்குத் தட்டுப்பாடு நேர்ந்தது. வானொலி-தொலைக்காட்சி மூலம் ஓர் அறிவித்தல் விடுக்கப்பட்டது: ''பால்மாவை வாங்கிவைத்திருப்போர் அதைக் கொண்டு வந்து ஒப்படைப்பதன்மூலம் குழந்தைகளுக்கு உதவலாம்!'' என்று பல முகவர் நிலையங்களில் பாவனையாளர்கள் க்யூவில் நின்று தாம் வாங்கிய பொருளைத் திரும்ப ஒபபடைத்தனர். அது சமூகக் கடப்பாடு! ஆனால் இங்கோ...?

நல்ல வேளையாக, வர்த்தகர் சங்கமும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியும் கலந்துரையாடி அத்தியாவசியப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இதன் பலாபலன்கள் உடனேயே தெரிய ஆரம்பித்துள்ளன. எண்ணெய், சவர்க்காரம் முதலிய பொருள்கள் கைக்கெட்டும் அளவுக்கு வந்துள்ளன.

இது போதாது மக்களுக்கு ஜீவாதாரமான அரிசியைக் காண்பது அரிதாகிவிட்டது நிவாரணமாக இம்முறை அரிசிக்குப் பதில் மா வழங்கப்பட்டதும் ஒரு காரணம். சில கடைகள் புழுங்கல் அரிசியை கொத்து 50 ரூபா வரை விற்கின்றன.

அரிசியும் கட்டுப்பாட்டு விலைக்குக் கிடைக்க வகை செய்யவேண்டும். விலைக் கட்டுப்பாடு என்றதும் சில வியாபாரிகள் தரங்குறைந்த அரிசியை விற்பனைக்கு வைக்கிறார்கள். எனவே மக்களைப் பாதுகாக்க, விலை நிர்ணயத்தோடு தர நிர்ணயமும் செய்தல் அவசியம்.

# சதாம் ஹுசைன் போர்க்குற்றவாளி விசாரணைக்குட்படுத்தப்படுவர் -புஷ்

வளைகுடாவில் நடைபெறும் பாலைவனப்புயல் நடவடிக்கை தொடரும். ஈராக் ஜனாதிபதி சதாம்ஹுசைனை சட்டத்தின் முன் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நேற்றுத் தெரிவித்தார். உலகை போருக்கு இட்டுச் சென்றகுற்றம் ஹுசைன் மீது சுமத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## ஜெகுவார்கள் ஈராக்கில் தாக்கு

நேற்று முதற்தடவையாக பிரெஞ் விமானப்படையின் ஜெகுவார் விமானங்கள் ஈராக்கினுள் நுழைந்து தாக்கின. ஈராக்கின் கவசவாகனப் பிரிவு மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

## ஈராக் வளைகுடாவை மாற்றி அமைக்கும்!

ஈராக் மீது தொடர்ந்து வான் தாக்குதல் நடந்தால் வளைகுடாவின் வரைபடத்தையே மாற்றி விடுவோம் என ஈராக் பாதுகாப்பு அமைச்சு எச்சரித்துள்ளது.

## ஹைபா மீது ஏவுகணை தாக்குதல்

நேற்றும் ஈராக் இஸ்ரேலின் ஹைபா நகர் மீதும் சவுதி அரேபியா மீதும் ஸ்காட் ஏவுகணை தாக்குதலை நடத்தியது எனினும் சேத விபரங்கள் அறிவிக்கப்படவில்லை.

## ஜப்பான் உதவி

அமெரிக்க நேசப்படைகளுக்கு ஜப்பான் நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளது ஒன்பதாயிரம் மில்லியன் டொலர் நிதியுடன் ஐந்து சரக்கு விமானங்களையும் ஜப்பான் வழங்கவுள்ளது.

## ஸ்காட்டிற்கே நேசப் படைகள் அச்சம்

ஈராக்கின் ஸ்காட். ஏவுகணையினாலேயே அமெரிக்க நேச அணிகள் தமது தரைப் படையை நகர்த்த பின்னிற்பதாக அமெரிக்க கூட்டுப் படைத்தளபதி ஜெனரல் பவல் தெரிவித்தார். ஸ்காட் ஏவுதளங்களை தேடி அழிக்கவே படையினரை நாம் பெருமளவில் இழக்க வேண்டியிருக்கும் என அவர் கூறினார். இதனால் தொடர்ந்தும் சில நாட்களுக்கு நேசநாட்டுப்படைகள் விமானத் தாக்குதலையே நடத்தலாம் எனக்கூறப்படுகிறது.

## பென்சன்...

வடிக்கைகள் தற்போது மேற்கொண்டு வருவதாலும் பட்டியல்களில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியிருப்பதாலும் உடனடியாக எதையும் செய்ய முடியாதிருப்பதாக கூறப்படுகிறது. (66)

## அ. தி. மு. க....

தெரிந்ததே.

இதேவேளை அ. தி மு.க சட்டப்பேரவையில் இருந்து வெளியேற்றியதை ஆட்சேபித்து இந்திரா காங்கிரஸ் உறுப்பினரும் நேற்று முதல் சட்டப்பேரவையை பகிஷ்கரிப்பது என முடிவு செய்துள்ளனர்.

## சாதனையாளர்...

நாட்டில் வெளியிடப்பட்டது. இன விடுதலைப் போரை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட 'அக்கினி' வெளியீட்டுக்குத் தயாராக இருக்கிறது. தற்போது அச்சில் இருக்கும் 'குவேனி' இந் நாட்டின் மீது தமிழருக்குள்ள பாத்தியதையைக் கூறும்.

நாவலாசிரியர் என்ற 'இமேஜ்' விசுவரூபம் எடுக்க, செங்கை ஆழியானின் இன்னொரு பரிமாணம் அமுங்கி விடுகிறது. அதுதான் புனைகதை சாராத (non fiction) துறையில் அவர் செய்துள்ள சாதனை. தமிழரிடையே documentation குறைவு. செங்கை ஆழியான் பல சமகால நிகழ்வுகளை ஆவணப்படுத்தியிருப்பது பாராட்டுக்குரியது. 1977 இல் யாழ்ப்பாணத்தில் பொலிஸ் வெறியாட்டம் '24 மணி நேரம்' ஆகவும் 1978 இல் மட்டக்களப்பைத் தாக்கிய சூறாவளி '12 மணி நேரம்' ஆகவும், 1981 இல் யாழ் நூலகம் எரியூட்டப்பட்டமை 'மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது' ஆகவும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. யாழ் கோட்டை முற்றுகைக்குள்ளாகியிருந்த வேளையில் அவர் எழுதிய 'களம் பல கண்ட கோட்டை' வாசகரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

குணராசா கல்வியுலகுக்குத் தந்துள்ளவை: 'கிரகித்தல்', 'பொது அறிவு', 'பொது உளச் சார்பு' தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்துக்கு அனுப்பப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட நூல்களுள் தெரிவு செய்யப்பட்டது, இவருடைய 'பொது உளச் சார்பு' ஒன்றே என்பது நமக்கெல்லாம் பெருமை தருகிற விஷயம். இதை NCBH வெளியிட்டுள்ளது

தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயிலும் மாணவர்கள் இவர் நாவல்களை ஆராயும் அளவுக்கு முக்கியமானவர் இந்தப் படைப்பாளி.

ஐம்பது வயதிலும் 'என்றும் அகலாத இளமைக்கார'னாக விளங்கும் செங்கை ஆழியான், மணிவிழாவுக்கு முன் தமது நாவல்கள் ஸ்கோரை ஐம்பதாக்கி விடுவார். அவற்றுள் ஒன்று அவருக்கு அழியாப் புகழைத் தருவதாக—அவருடைய Magnum Opus ஆக விளங்கும். நூற்றாண்டு நிறைவு கண்டுள்ள யாழ் இந்துக் கல்லூரி இந்த மைந்தனையிட்டு நியாயமான பெருமையடையலாம்.

— சோ. பத்மநாதன்

## சாவகச்சேரியில்...

பெற்ற கூட்டத்தில் தீர்மானித்துள்ளது

பாணின் மொத்த விலை 8 ரூபாவாகவும் சில்லறை விலை 8 ரூபா 50 சதமாகவும் இருக்க வேண்டும் எனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக சாவகச்சேரி [illegible] தொழில் வர்த்தகர் சங்க தலைவர் திரு கு. தவராசசிங்கம் தெரிவித்தார். (ப-5)

## களஞ்சியப்படுத்தும்...

வேண்டும்

பதிவு செய்யப்படாத இடங்களில் களஞ்சியப்படுத்தல் கண்டுபிடிக்கப்பட்டால் கட்டிட உரிமையாளர்கள் கடும் தண்டனைக்குள்ளாக்கப்படுவதுடன் பொருள்களும் பறிமுதல் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (66)

## மேஜர்...

மேஜர் தாரிணியின் (மதிவதனி சுப்பிரமணியம் - 23 அத்தாய், பூநகரி) பூதவுடல் பூநகரி வாடியடிச் சந்தையில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. ஆயிரக்கணக்கானோர் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர், (ப 35)

## அத்தியாவசிய...

றெக்சோனா 8 ரூபா 30 சதம், வொண்டலையிற் (சி) 7 ரூபா 95 சதம், லக்ரோஜின் (புக் கிறீம்) 70 ரூபா, நெஸ்ரோமோல்ட் (ரின்) 83 ரூபா 50 சதம், செரிலாக் 73 ரூபா 50 சதம், அங்கர் 56 ரூபா 50 சதம், கிறீம் கிறாக்கர் 27 ரூபா 50 சதம் ஆகிய சில்லறை விலைகளில் விற்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (66)

## யாழ் நகரில்...

முதலாளிகளே மனிதாபிமானத்தைக் கடைப்பிடி, இலட்சியப்பற்றுள்ளமக்களை வளைக்கமுடியாது, தமிழ் இரத்தத்தில் பண நோட்டை தேடாதே, சிங்களப் படைபோல் செயற்படாதே, மண்ணெண்ணெயை மண்ணில் புதைத்தால் மன்னிப்புக் கிடைக்குமா போன்றகோஷங்கள் எழுப்பப்பட்டன.

(33, 66, 47, 74)

மீண்டும் சேவை

பொது மக்களின் நலன்கருதி
மீண்டும் செயலாற்ற முன்வந்துள்ளது

வில்லியம் ஹாவே
ஞாபகார்த்த மருத்துவமனை
WILLIAM HARVEY MEMORIAL HOSPITAL

வைத்திய நிபுணர்களின் ஆலோசனை பெறவும் ஆய்வுகூட மருத்துவப் பரிசோதனைகளுக்கும், தரமான சிகிச்சைகளுக்காகவும் இரவு பகல் சேவையை 1991 ஜனவரி 26 ஆம் திகதி முதல் வில்லியம் ஹாவே ஞாபகார்த்த மருத்துவமனை மீண்டும் செயலாற்ற முன்வந்துள்ளது.

இப்படிக்கு
நிர்வாகம்,

17, கண்டி வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

01181

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடுடச்க வீதி. 'லக்ஷ்மிபில்டிங் இல்' உள்ள அச்சகத்தில் 25-01-1991இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.